RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 360 | டிசம்பர்.30 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “100 நாள் வேலைத் திட்டத்தை பாஜக இழுத்து மூடியது பெண்களுக்கு விரோதமானது” முதல்வர் ஸ்டாலின்

திருப்பூர்: டிச.30-

“பெண்களின் வாழ்வாதாரத்துக்குத் துணையாக இருந்த மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலைத் திட்டத்தை இன்றைக்கு இழுத்து மூடியிருக்கிறார்கள். பாஜகவின் இந்த நடவடிக்கை பெண்களுக்கு முற்றிலும் விரோதமானது” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் இன்று திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்ற ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ என்ற பெயரிலான திமுக மகளிரணியின் மேற்கு மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு பேசியது: “கருப்பு ஞ் சிவப்புக் கடல் போன்று லட்சக்கணக்கான பெண்கள், தாய்மார்கள், இப்படி ஒரே இடத்தில் கூடுயதாக வரலாறே இருக்காது. உங்களைப் பார்க்கும்போதே, பவர்ஃபுல்லாக இருக்கிறது. பவர்ஃபுல்லாக மட்டுமல்ல, வுமன் பவரால் திமுக மீண்டும் பவருக்கு வரப்போவதும் உறுதியாகி இருக்கிறது.

இப்படியொரு பவர்ஃபுல் மாநாட்டுக்கான பணிகளை எல்லாம் முழுமையாகத் தன் தோளில் சுமந்து, மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியிருக்கும் ஆற்றல்மிக்க செயல்வீரர் செந்தில் பாலாஜிக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள். இந்த மாநாட்டுக்குத் தலைமையேற்றிருக்கும் திமுக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழிக்கும், அவருக்குத் துணையாக உடன் நிற்கும் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்.

கனிமொழியைப் பொறுத்தவரை, கவிஞர் பத்திரிகையாளர் மரபுக் கலைகளில் ஆர்வம் கொண்டவர் என்று பன்முகத் திறமை கொண்டவர். எப்போதுமே, புன்னகை மாறாத முகத்துடன் இருப்பார். இப்போதுகூட பாருங்கள். அதேவேளையில், நாடாளுமன்றத்தில் உரிமைக் குரல் எழுப்பும்போது, கர்ஜனை மொழியாகவும் சீறுவார்.

அதுமட்டுமல்ல, தேர்தல் என்று வந்துவிட்டாலே, தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைதான் ‘ஹீரோ’. அந்த ‘ஹீரோ’வையே தயாரிக்கும் பொறுப்பை இப்போது அவர் ஏற்றிருக்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில்,



அந்தப் பணியை அவர் செய்தபோது, முழுமையான வெற்றி பெற்றோம். வரும் சட்டமன்றத் தேர்தலிலும், மாபெரும் வெற்றியைப் பெறப் போகிறோம். அது உறுதி.

ஒரு கோடியே 30 லட்சத்து 69 ஆயிரத்து 831 சகோதரிகளுக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை உரிமைத் தொகையாக கொடுக்கிறோம். இந்த உரிமைத் தொகை பல பெண்களுக்குச் சுயமரியாதையை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

முதலமைச்சராக நான் போட்ட முதல் கையெழுத்தே பெண்கள் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் செய்யும் திட்டத்திற்குத்தான். இந்த விடியல் பயணத்தில் உங்களுக்கு ஒரு சுதந்திரமும், முக்கியத்துவமும் கிடைக்கிறது இல்லையா? அதுதான் என் கனவு, என் லட்சியம் எல்லாம்.

அடுத்து, அரசுப் பள்ளியில் படித்து முடிக்கும் பெண்கள், கல்லூரியில் சேரும் எண்ணிக்கை குறைவாக இருப்பதைக் கண்டுபிடித்தோம். இதை எவ்வாறு தடுக்கலாம் என்று சிந்தித்து உருவாக்கப்பட்ட திட்டம்தான், புதுமைப்பெண் திட்டம். சுமார் ஏழு லட்சம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

நான் தொடர்ந்து திரும்ப திரும்ப வலியுறுத்திச் சொல்லும் ஒரு விஷயம், “கல்விதான், யாராலும் திருட முடியாத சொத்து”. அதிலும், ஒரு பெண் படித்தால், அந்தக் குடும்பத்தின் நான்கைந்து தலைமுறையே முன்னேற்ற முடியும். அப்படிப்பட்ட பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, பெண்களின் கல்லூரிக் கனவு தடைபடக் கூடாது என்றுதான், புதுமைப் பெண் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். இந்த திட்டத்தில் மாதாமாதம் 6 லட்சத்து 92 ஆயிரத்து 471 மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கிக்கொண்டு இருக்கிறோம்.

எளிமையாகச் சொல்லவேண்டும் என்றால், திராவிட மாடல் ஆட்சி பெண்களுக்கான ஆட்சி. பெண்கள் முன்னேறினால்தான் ஒட்டுமொத்தச் சமூகமும் முன்னேறும் என்று நாம் இவ்வளவு செய்கிறோம். ஆனால், ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பா.ஜ.க. அரசு என்ன செய்துள்ளது? நாடு முழுவதும் இருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்துக்குத் துணையாக இருந்த மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலைத் திட்டத்தை இன்றைக்கு இழுத்து மூடியிருக்கிறார்கள்.

பாஜகவின் இந்த நடவடிக்கை பெண்களுக்கு முற்றிலும் விரோதமானது. அதற்கு ஒத்து ஊதுவது யார்? எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி என்ன சொல்கிறார்? “நூறு நாள் வேலைத் திட்டத்தை நிறுத்தவில்லை, 125 நாளாக உயர்த்தி இருக்கிறார்கள்” எனப் பச்சைப் பொய்யைப் பிரசாரமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

ஏற்கெனவே, ஆண்டுக்கு சராசரியாக 47 நாள்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள். இனி அதுவும் கொடுக்கப் போவதில்லை. இது போதாதென்று, புதிய திட்டத்தில் நிதிச்சுமையையும் மாநிலங்களின் தலையில் கட்டிவிட்டார்கள். இன்னும் எக்கச்சக்க கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் வைத்துப் பார்த்தால், இதுவரை கிடைத்த 40 சொச்சம் நாள் கூட இனி வேலை கிடைக்குமா என்றே தெரியாத நிலையில் இருக்கிறோம்.

கடந்த 4 ஆண்டுகளில் 100 நாள் வேலைத் திட்டத்தில் பயனடைந்தவர்களில் 86% பெண்கள்தான். பெண்களுக்கு வாழ்வளித்த இப்படிப்பட்ட திட்டத்தைத்தான் நிறுத்தியிருக்கிறார்கள். இதனால் கிராமப் பொருளாதாரமும், பணப்புழக்கமும் அடி வாங்கப் போகிறது.

எதையாவது படித்தால்தானே பழனிசாமிக்கு இவையெல்லாம் புரியும். கமலாலயத்தில் எழுதிக் கொடுக்கும் அறிக்கையை, அதிமுக லெட்டர்பேடில் வெளியிட்டு, அத்துடன் கதை முடிந்துவிட்டது என்று செல்கிறார். ஒரு படி மேலே சென்று, பாஜக சங்கிகளே கூச்சப்படும் அளவுக்கு 100 நாள் வேலைத் திட்ட இரத்துக்கு முட்டு கொடுத்துக்கொண்டு சுற்றுகிறார். இப்படிப்பட்ட துரோகங்களையும் தடைகளையும் தாண்டித்தான், திராவிட மாடல் ஆட்சியில் நாடே திரும்பிப் பார்க்கும் சாதனைகளை நாம் செய்துகொண்டு இருக்கிறோம்.

தங்கை கனிமொழிக்கு மட்டும் நான் அண்ணன் இல்லை; இங்கே வந்திருக்கும் கொள்கைச் சொந்தங்களான உங்கள் எல்லாருக்கும் நான் அண்ணன்தான். உங்கள் குடும்பத்தில் ஒருவன்தான் நான். அதனால்தான் உரிமையோடு சொல்கிறேன். தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தை அடுத்தகட்டத்துக்குக் கொண்டு செல்ல, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தே தீர வேண்டும். அதற்கான உங்கள் பணியை இப்போதே தொடங்க வேண்டும்” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## “வரும் சட்டமன்ற தேர்தலில் நீதியின் நெருப்பில் திமுக சுட்டு பொசுக்கப்படும்” - நயினார் நாகேந்திரன்

சென்னை, டிச.30-

டாஸ்மாக் மாடல் அரசின் கீழ் போதையின் பிடியில் சிக்கியுள்ள தமிழகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கரூர் மாவட்டம் குளித்தலை அருகே கழுகூரில் அதீத மதுபோதையில் இளைஞர் ஒருவர், விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமியைத் தூக்கிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் நெஞ்சைப் பதைபதைக்க வைக்கின்றன. அரசியல் தலைவர் என்பதையும் தாண்டி ஒரு தகப்பனாக இச்சம்பவத்தை என்னால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

பாதிக்கப்பட்ட அக்குழந்தை முழு மன மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் மீண்டு வர இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன். இந்த டாஸ்மாக் மாடல் அரசின் கீழ் போதையின் பிடியில் சிக்கியுள்ள தமிழகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. அவையனைத்திற்கும் பின்னணியில் போதையின் கரங்கள் தான் ஓங்கியிருக்கின்றன.

ஆனால், “போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம்” என வீர வசனம் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலினின் இரும்புக்கரமோ இத்துப்போய்விட்டது. எந்தப் பெண்களுக்கும் பாதுகாப்பில்லாத ஒரு அவல ஆட்சியை நடத்திக் கொண்டு “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” என்ற விளம்பரப் பதாகைகளைத் தூக்கிப் பிடிக்க திமுகவினர் கூனிக் குறுக வேண்டும்.

மழலை மாறாத குழந்தையைச் சீரழித்த அக்கொடும் குற்றவாளியும், கடந்த நான்கரை ஆண்டுகளாகப் பெண்களின் பாதுகாப்பை அடகு வைத்து ஆட்சி நடத்தும் திமுகவும் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில் நீதியின் நெருப்பில் திமுக சுட்டுப் பொசுக்கப்படும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ 844 மருத்துவ முகாம்களில் 13 லட்சம் பேர் பயனடைந்தனர்

சென்னை, டிச.30-

தமிழகம் முழுவதும் 21 வாரமாக நடைபெற்ற 844 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களில் 13 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாமை முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி தொடங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் மொத்தம் 1,256 இடங்களில் முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, வாரம்தோறும் சனிக்கிழமை மட்டும் நடந்து வந்த முகாம், தற்போது வியாழக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்று வருகிறது.

இந்த முகாம்களில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, இதயம், நுரையீரல், எலும்பியல், நரம்பியல், தோல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு, இயன்முறை மருத்துவம், பல், கண், மனநலம், குழந்தைகள் நலம் ஆகிய மருத்துவ சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

பரிசோதனைகள் மட்டுமின்றி, முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 21வது வாரமாக நேற்று முன்தினம் 44 இடங்களில் நடந்த முகாம்களில் 65,147 பேர் பயனடைந்தனர். இதுவரை 21 வாரமாக நடைபெற்றுள்ள 844 முகாம்களில் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்.

## “திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் கஞ்சா கலாச்சாரம் உச்சத்தை அடைந்துள்ளது” -அன்புமணி

சென்னை, டிச.30-

அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்ட திமுக அரசு, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்துவிட்டது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னையில் இருந்து திருத்தணி சென்ற வடமாநில இளைஞரை திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் கஞ்சா போதையில் இருந்த 4 சிறுவர்கள் சரமாரியாக வெட்டி ரீல்ஸ் எடுத்து வெளியிட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டின் சிறுவர்களையும், இளைஞர்களையும் சீரழித்து வரும் போதைப் பொருள்களை கட்டுப்படுத்த திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த சுராஜ் என்ற தொழிலாளி சென்னையில் இருந்து திருத்தணிக்கு மின்சார தொடர்வண்டியில் பயணம் செய்திருக்கிறார். திருவாலங்காடு தொடர்வண்டி நிலையத்தில் அந்த தொடர்வண்டியில் ஏறிய 4 சிறுவர்கள் கஞ்சா போதையில் தங்களிடமிருந்த அரிவாளை எடுத்து அவரை வெட்டுவது போல மிரட்டியுள்ளனர். அதை அவர்களில் ஒருவன் காணொலியில் பதிவு செய்திருக்கிறான். இதனால் அச்சமடைந்த சுராஜ், அவர்களை தடுத்து விட்டு, திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் இறங்கியுள்ளார்.

ஆனால், அவரை விடாமல் துரத்திச் சென்ற சிறுவர்கள் தொடர்வண்டி நிலையத்தில் வைத்து அந்த இளைஞரை சரமாரியாக வெட்டி அதை காணொலியாக பதிவு செய்து இணையத்தில் பரவவிட்டுள்ளனர். படுகாயங்களுடன் மயங்கிக் கிடந்த இளைஞரை அங்குள்ள மக்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்த நிகழ்வு குறித்த செய்தியை கேட்கும்போதே நெஞ்சம் பதறுகிறது; உடல் நடுங்குகிறது.

பள்ளி செல்ல வேண்டிய வயதில் உள்ள சிறுவர்கள் கஞ்சா போதைக்கு அடிமையாகி பொதுமக்கள் முன்னிலையில் தொடர்வண்டியிலும், தொடர்வண்டி நிலையத்திலும் ஒருவரை அரிவாளால் வெட்டி படம் பிடித்து வெளியிடத் துணிகிறார்கள் என்றால் தமிழ்நாட்டில் கஞ்சா புழக்கமும், அதனால் ஏற்படும் தாக்கமும் எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த சீரழிவுக்கு முழுக்க முழுக்க திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தான் தமிழ்நாட்டில் கஞ்சா கலாச்சாரம் உச்சத்தை அடைந்தது. இது தொடர்பாக கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதி முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

அதைத் தொடர்ந்து 28.07.2022ஆம் நாள் போதைப் பொருள்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி எனது தலைமையில் போராட்டமும் நடத்தப்பட்டது. ஆனால், எந்த பயனும் இல்லை.

தமிழ்நாட்டிற்கு ஆந்திராவிலிருந்து தான் அதிக அளவில் கஞ்சா கடத்தி வரப்படுகிறது என்பதால் எல்லையோர மாவட்டங்களில் அதன் புழக்கம் அதிகமாக இருக்கிறது என்றும், அதைத் தடுக்க வேண்டும் என்றும் மக்கள் உரிமை மீட்பு பயணத்தின் போது திருத்தணியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினேன்.

கடந்த வாரம் திருத்தணியில் நடைபெற்ற மகளிர் உரிமை மீட்புப் பயணத்தில் பேசிய பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணியும் இதே கருத்தை வலியுறுத்தினார். அடுத்த வாரத்திலேயே அதே திருத்தணியில் கஞ்சா போதையில் சிறுவர்கள் அட்டகாசம் செய்திருப்பதிலிருந்தே இந்த விஷயத்தில் திமுக அரசு எந்த அளவுக்கு செயலற்று கிடக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்ட திமுக அரசு, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்து விட்டது. அதனால் பொதுவெளிகளில் பொதுமக்கள் அச்சமின்றி நடமாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு காரணமான திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள்.” என தெரிவித்துள்ளார்.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் 22 இடங்களில் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு

செங்கல்பட்டு, டிச.30-

செங்கல்பட்டு மாவட்டத்தில், வனத்துறை சார்பில், சுமார் 22 இடங்களில் நீர், நில பறவைகள் குறித்த கணக்கெடுப்பு பணி கடந்த 2 நாட்களாக நடைபெற்றது. இதில், 84 வகையான பறவை இனங்களும், 1,000க்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது.



பறவைகள், சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் உயிரினமாகும். எனவே, பறவை இனத்தையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க, தமிழக அரசு மாநிலம் முழுவதும், 2,000க்கும் மேற்பட்ட இடங்களில் (ஈர நிலங்கள் மற்றும் நிலப்பகுதிகள்) மிகப் பெரிய அளவில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பை 2023ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அதன்படி, வனத் துறை சார்பில், இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு டிச. 27, 28 ஆகிய 2 நாள்கள் நடைபெற்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில், 22 இடங்களில் நீர், நில பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது.

இதில் வனத்துறையினர் தன்னார்வ அமைப்பினர், கல்லூரி மாணவர்கள், தொழில்முறை புகைப்பட கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருப்போரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர் உள்ளிட்ட, 22 ஈர நில பகுதிகளில் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில், 84 வகையான பறவை இனங்களும், 1,000க்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது. 2ம் கட்டமாக நிலப் பரப்புகளில் கணக்கெடுப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என, வனத்துறையினர் தெரிவித்தனர்.



■ வேலூர் மாவட்டம் குடியாத்தம் ஆஸ்திக சமாஜத்தில் Mr.தமிழ்நாடு அமைச்சூர் ஆணழகன் –பிட்னஸ் சங்கம் சார்பில் ஆணழகப்போட்டி நடைபெற்றது. இந்த ஆணழக போட்டிருக்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் அரசு வழக்கறிஞர் K.M.பூபதி தமிழ் மாநில காங்கிரஸ் அருணோதயம் ரோட்டரி கிளப் குமரகுருபுத்தர் சமூக கல்வி அறக்கட்டளை தலைவர் இராசி. தலித் குமார் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள். உடன் அமைச்சூர் ஆணழக மாவட்ட தலைவர் அழகு. ரஜினி காந்த்மற்றும் தினகரன் சரத்குமார் ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .இந்த நிகழ்ச்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர் நிகழ்ச்சியை அழகு பிட்னஸ் குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.




■ திருப்பூரில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கடந்த (26.12.2025) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி ரோட்டரி மஹாலில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ் ராஜா, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் நகர்மன்றத்தலைவர் பாப்புக்கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.



■ வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று எண்.43, வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள பாகம் எண் 88, 89, 90, 91 மற்றும் 92 ஆகிய வாக்குச்சாவடி வாக்காளர்களுக்கு நடைபெற்றுவரும் புதிய வாக்காளர் சேர்க்கை, வாக்காளர் பட்டியல் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள், முகவரி மாற்றம், திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வேலூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர் / மாநகராட்சி ஆணையாளர் இரா. லெட்சுமணன், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் /வேலூர் வட்டாட்சியர் வடிவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்க வருடாந்திர அறிவியல் நாட்காட்டி வெளியீடு

காளையார் கோவில், டிச.30-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்க வருடாந்திர நாட்காட்டி வெளியீடு விழா நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் தலைமை வகித்தார். காளையார்கோவில் வட்டாரக் கல்வி அலுவலர் பொன்னி மாவட்ட துணைத் தலைவர் முனைவர் சேவற்கொ டியோன் முன்னிலை வகித்தனர். கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை வரவேற்புரை ஆற்றினார். நிறுவனத்தின் முதல்வர் முனைவர் முருகன் வருடாந்திர நாட்காட்டியை வெளியிட்டு அறிவியல் சுயசார்பிற்கே என்பதை அறிவியல் வருடாந்திர நாட்காட்டியை கொண்டு அறிவியல் தினங்களையும் அறிவியல் அறிஞர்களைப் பற்றிய செய்திகளையும் அறிவியல் செயல்பாடுகளையும் ஒவ்வொரு நாளும் தனக்கும் மாணவர்களுக்கும்





சமூகத்திற்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சர்வதேச பெண் விவசாயி ஆண்டு சர்வதேச நீடித்த வளர்ச்சியின் தன்னார்வலர்களுக்கான ஆண்டை முன்னிட்டு வருடாந்திர அறிவியல் நாட்காட்டி வெளியிடப்பட்டுள்ளது என்றும் அதில் அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் பிறந்த தினம் முக்கிய தினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும் விரிவாக எடுத்துரைத்தார். மாவட்டப் பொருளாளர் பிரபு நன்றி கூறினார். துணை முதல்வர் கவிக்குயில் சாருமதி பேராசிரிய பெருமக்கள் பரமேஸ்வரன் முத்துக்கருப்பன் சரளா முனைவர் மெய்யாத்தாள் நூலகர் சுபைர் அலி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





# தோட்டத்தில் வளர்க்கப்பட்டு வந்த சந்தன மரம் வெட்டி கடத்தல் மர்ம நபர்களுக்கு போலீஸ் வலை வீச்சு

சிவகங்கை, டிச.30-

சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் அருகே மேலமங்கலம் பகுதியில் கடந்த டிசம்பர் 26 அன்று தனியார் வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்பட்டிருந்த சந்தனம் மரத்தை, அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் நள்ளிரவில் வெட்டி கடத்திச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரமேஷ் (35). இவர் குடும்பத்துடன் சிங்கப்பூரில் வசித்து வருகிறார். அவரது சொந்த



ஊரில் அவரது தாயார் காளியம்மாள் மட்டும் வசிக்கிறார்.அங்குள்ள வீட்டு தோட்டத்தில் சந்தன மரம் வளர்த்து வந்தனர். வீட்டின் பின்புறத்தில் பல ஆண்டு களாக வளர்க்கப்பட்டிருந்த சந்தனம் மரம் நேற்று முன்தினம் காலை காணாமல் போனது. அவரது தாய் வெளியே வந்து பார்த்தபோது, சந்தனம் மரம் வெட்டப்பட்ட நிலையில் இருந்ததும், சந்தன மரக்கட்டைகள் முழுவதுமாக கடத்தப்பட்டிருந்ததும் தெரியவந்தது. இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக வனத்துறைக்கும் காவல் துறைக்கும் தகவல் அளிக் கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, தடயங்களை சேகரித்தனர். சந்தனம் மரம் மிக உயர்ந்த மதிப்புடையதால், திட்டமிட்டே இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அருகிலுள்ள பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மர்ம நபர்களை கண்டறிய தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

தனியார் வீடுகளில் வளர்க்கப்படும் சந்தனம் மரங்களின் பாதுகாப்பில் பொதுமக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும், சந்தேகத்திற்கிடமான நபர்கள் நடமாட்டம் குறித்து உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.





## விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மத்திய பகுதி 50வது சார்பில் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானம்

தாம்பரம், டிச.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மத்திய பகுதி 50வது வார்டு சார்பில் மத்திய பகுதி அவை தலைவர் பாலாஜி, ஐம்பதாவது வட்டக் கழக செயலாளர் பாலமுருகன் தலைமையில் வாஷிம்ராஜா என்.ராஜா, அரங்கை இ.கணேசன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மலர் தூது மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான மா.செழியன் கலந்து கொண்டு விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அதனைத் தொடர்ந்து சுமார் 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் வார்டு நிர்வாகிகள் தினேஷ், அலியார், அரிமா மாலதி, பானுமதி, வள்ளி, திலகா, சித்ரா, சதீஷ்குமார், விஜயராகவன், குழந்தை ராஜா, தேவராஜ், முரளிமனோகரன், ராஜகோபால், முத்து, சக்திவேல், விஜயகுமார், கொரியர் முருகன், ஜார்ஜ், சின்னா, இப்ராஹிம் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





## விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி 53வட்ட சார்பில் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானம்

தாம்பரம், டிச.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி 53வது வட்ட சார்பில் 53வது வட்ட செயலாளர் பாஸ்கர் தலைமையில் 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மலர் தூது மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் மார்க்கெட் ஞானப்பால் கலந்து கொண்டு விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் வி..தேவேந்திரன், எஸ்.பிரபாகரன், வி.வெங்கடேசன், முத்து, கன்னியப்பன், கவின், பத்மாவதி, மற்றும் தேமுதிக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் மாற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பெற்றுக் கொண்டார்.




# மதுரையில் ஆகாஷ் நிறுவனத்தின் புதிய கல்விசார் இன்விக்டஸ் வளாகம்

மதுரை, டிச.30-

தமிழ்நாட்டின் முக்கிய கல்வி மையங்களில் ஒன்றான ஆகாஷ் நிறுவனம் மதுரையில் தனது புதிய கல்விசார் இன்விக்டஸ் வளாகத்தை நவீன முழுமை யான டிஜிட்டல் வகுப்பறைகளுடன் திறந்துள்ளது இது குறித்துப் தலைமை கல்வி மற்றும் வணிகத் தலைவர் தீரஜ் குமார் மிஸ்ரா பேசுகையில் : 2025 ஆம் ஆண்டு நீட் தேர்வில் மதுரை பிராந்தியத்தைச் சேர்ந்த ஆகாஷ் மாணவர்கள் கவுன்சிலிங்கின் போது மொத்தம் 164 இடங்களில் 112 அரசு MBBS இடங்களைப் பெற்றுள்ளனர். இது சமீபத்திய ஆண்டுகளில் பிராந்திய அளவில் சிறந்த செயல் திறன்களில் ஒன்றாகும். இந்திய தேசிய கணித ஒலிம்பியாட் (INMO) 2025 இல் குறிப்பிடத்தக்க முடிவுகளை வெளிப்படுத்தினர்.மாணவர்களும் பெற்றோர்களும் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை எங்களை மேலும் வலுப்படுத்துகின்றது.இந்த புதிய வளாகம் இன்னும் சிறப்பாக அமையும் எனவும் தெரிவித்தார். நிகழ்வில் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.




■ திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த P.சரவணன் கடந்த 19.12.2025 தேதி மாரடைப்பால் உயிரிழந்தார்.இதையடுத்து ஒட்டன்சத்திரம் உட்கோட்டத்தில் பணிபுரியும் காவலர்கள் ஒன்றிணைந்து ரூ.5,33,000 உதவித்தொகையை பெற்றனர்.இந்நிலையில் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட எஸ்பி.பிரதீப் முன்னிலையில் றி.சரவணன் மனைவியிடம் ரூ.5,33,000 க்கான காசோலையை வழங்கினார்கள்.

# வற்றாத செல்வம் அருளும் வைகுண்ட ஏகாதசி விரதம்




மகாவிஷ்ணுக்குள் இருந்த சக்தியானது பெண் உருவம் கொண்டு முரனை எரித்து சாம்பலாக்கியது. மகாவிஷ்ணு அச்சக்திக்கு ஏகாதசி என்று பெயரிட்டு, அரக்கனை வதைத்த நாளில் விரதம் மேற்கொண்டு மகாவிஷ்ணுவை வழிபடுவோருக்கு மகாவிஷ்ணு வாசம் செய்யும் வைகுண்டத்தை அடையும் பேற்றை வழங்குவதாக அருளினார். மனிதர்களின் ஓராண்டு, தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அதன்படி மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலை நேரம் ஆகும்.

இம்மாதம் மகாவிஷ்ணு அரிதுயிலில் இருந்து விழித்தெழும் மாதம். ஆகவேதான் இந்த மாதத்தில் வரும் ஏகாதசி சிறப்பு பெறுகிறது. இந்த மாதத்தில் வரும் தேய்பிறை ஏகாதசி 'உத்பத்தி ஏகாதசி' எனப்படுகிறது. மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று, வைகானஸர் மேற்கொண்ட விரதத்தின் பயனாக அவருடைய முன்னோர்கள் (முக்தி) வைகுண்ட பதம் அடைந்ததிலிருந்து, அந்த ஏகாதசி, எல்லா ஏகாதசிகளையும் விட மிக முக்கியமாகக் கருதப்பட்டு (மோட்சம்) வைகுண்ட ஏகாதசி என்று போற்றப்படுகிறது. மூன்று கோடி ஏகாதசி விரத பலனை அளிப்பதால் 'முக்கோடி ஏகாதசி' என்றும் பெயர்.

வைகுண்ட ஏகாதசி அன்று கோயிலின் வடக்கு புறத்தில் உள்ள வாயில் திறக்கப்பட்டு மக்கள் அவ்வாயிலினை கடந்து செல்கின்றனர். இதுவே சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சியாகும். விரதம் இருந்து இவ்வாயிலினை கடந்து சென்றால் மீண்டும் பிறவாமை நிலை ஏற்பட்டு வைகுண்டத்தை அடையலாம் என்று காலம் காலமாக நம்பப்படுகிறது.ஒவ்வொரு ஏகாதசியும் ஒவ்வொரு பலனை வழங்கினாலும், மார்கழி மாத ஏகாதசி விரதம் வைகுண்ட பதவிக்கும் வழிவகுக்கும் என்பதே சிறப்பு வாய்ந்ததாகும்.உடனடியாக பலனளிக்கும் மிகச் சக்தி வாய்ந்த தானங்களில், எள் தானம் மிக முக்கியமானது. அதனை ஆறு வகையில் (குடிநீரிலோ, ஸ்நான தீர்த்தத்திலோ, உணவிலோ, வேள்வியிலோ, திண்பண்ட உருண்டையிலோ அல்லது வெறுமனேயோ) தானம் செய்ய மிகவும் உகந்த நாள்.

மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று கோபூஜை செய்வதை வைதரணி விரதம் என்பர். பாற்கடலில் மந்தார மலையை மத்தாகவும், வாசுகியை கயிறாகவும் கொண்டு எம்பெருமான் அமுதத்தை கடைந்து எடுத்த ஒப்பற்ற நாள் வைகுண்ட ஏகாதசி ஆகும். குருக்ஷேத்திர போரில் பார்த்தனுக்கு கீதையை உபதேசித்த நாள் இந்த நாள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏகாதசி அன்று அதிகாலையில் எழுந்து நீராடி வீட்டில் மகாவிஷ்ணுவின் படம் (அல்லது) சிலைக்கு வழிபாடு நடத்தலாம்.

வழிபாட்டில் மஞ்சள், குங்குமம், வாழை மற்றும் பிற பழ வகைகள், துளசி ஆகியவை இடம் பெறவேண்டும். மகாவிஷ்ணுவின் பாடல்களை பாடலாம், தியானம் இருக்கலாம். பின் அருகில் உள்ள விஷ்ணு ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துகின்றனர். சிலர் மௌனவிரதம் மேற்கொள்கின்றனர். பகல் முழுவதும் உணவருந்துவதில்லை. ஒரு சிலர் பால் மற்றும் பழங்கள், துளசித் தண்ணீர் அருந்துகின்றனர்.

ஏகாதசி அன்று இரவு விஷ்ணு ஆலயத்திற்கு சென்று இரவு முழுவதும் விழித்து மகாவிஷ்ணுவின் எட்டு எழுத்து மந்திரமான ``ஓம் நமோ நாராயணா'' என்பதையும், விஷ்ணு ஸஹஸ்ர நாமம், நாராயண கவசம், விஷ்ணு புராணம் ஆகிய மகாவிஷ்ணு பற்றிய பாடல்களைப் பாடி வழிபாடு நடத்துகின்றனர். இறுதியில் சொர்க்க வாசல் திறப்பு விழாவில் கலந்து கொள்கின்றனர். மறுநாள் துவாதசி காலையில் குளித்துவிட்டு மீண்டும் கோயில் சென்று வணங்கிவிட்டு காலை உணவினை உண்டு விரதத்தை முடிக்கின்றனர். இருப்பினும் துவாதசி அன்று மாலை சூரியன் மறைவிற்கு பிறகே தூங்கவேண்டும்.

# அருள்மிகு அசலேஸ்வரர் திருக்கோயில்



63 நாயன்மார்களில் ஒருவரான இவர் சிறுவயதிலிருந்து திருவாரூர் பெரிய கோயிலில் உள்ள புற்றிடங்கொண்டீசரை வழிபட்டு வந்தார்.இக்கோயிலுக்குள்ளேயே அரநெறி என்ற தனிக்கோயில் உண்டு. இங்குள்ள சிவன் அரநெறியப்பர் என அழைக்கப்படுகிறார் இவரையும் நமிநந்தியடிகள் வழிபாடு செய்து வந்தார். ஒருமுறை அரநெறியப்பர் கோயிலுக்கு மாலை வேளையில் வழிபாடு செய்ய வந்தார்.கோயில் விளக்கு ஒளி மங்கலாகி, நெய் தீர்ந்து போகும் நிலை ஏற்பட்டது. அப்போது அடிகள் விளக்கேற்ற யாராவது வருகிறார்களா என பார்த்தார். யாரும் வரவில்லை. தொலைவிலுள்ள தமது வீட்டிற்கு சென்று நெய் வாங்கி வருவதற்குள் நன்றாக இருட்டிவிடும். அத்துடன் விளக்கும் அணைந்துவிடும் என்று நினைத்த அடிகள் கோயில் வாசலில் இருந்த வீட்டிற்கு சென்று சிறிது நெய் கேட்டார். அந்தக்காலத்தில் கோயிலை சுற்றி சமணர்கள் அதிகம் வசித்து வந்தனர். இவர் நெய் கேட்ட சமணர் வீட்டை சேர்ந்தவர்கள், "கையில் தீ ஏந்தி நடனம் செய்யும் உங்கள் இறைவனுக்கு விளக்கு தனியாக வேண்டுமா? தீயின் ஒளியே போதுமே.

அப்படியும் நீ விளக்கு ஏற்ற வேண்டுமானால், கோயில் எதிரில் உள்ள குளத்து நீரை எடுத்து தீபத்தை ஏற்றுவது தானே? என கேலி பேசினர். இதனால் வருத்தமடைந்த அடிகள் கோயிலுக்கு வந்து, "இறைவா! உனக்கு விளக்கேற்ற நெய் கேட்க சென்ற வீடுகளில், என்னுடன் சேர்த்து உன்னையும் கேலி செய்கின்றனர்.இதையெல்லாம் கேட்பதற்கு நான் என்ன பாவம் செய்தேன்? என அழுது புலம்பினார் அப்போது இறைவன் அசரீரியாக, அடிகளே! கலங்காதே. அவர்கள் கூறியபடி இங்குள்ள குளத்து நீரை எடுத்து எனது சந்நதியில் விளக்கேற்றவும் என கூறினார் இதைக்கேட்டவுடன் அடிகளுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. உடனே ஓடிச்சென்று அங்கிருந்த சங்கு தீர்த்தம் எனப்படும் குளத்திலிருந்த நீரை எடுத்து வந்து விளக்கில் ஊற்றி தீபத்தை தூண்டிவிட்டார். தீபம் முன்பை விட பலமடங்கு பிரகாசமாக எரிந்தது. அத்துடன் அங்கிருந்த பல விளக்குகளிலும் நீரை ஊற்றி தீபம் ஏற்றினார். கோயில் முழுவதும் சூரிய ஒளி பட்டது போல் பிரகாசித்தது. இதை கேள்விப்பட்ட சமணர்கள் இறைவனின் திருவிளையாடலை கண்டு ஆச்சரியமடைந்தனர்.

சோழமன்னன் அடிகளின் பக்தியை கேள்விப்பட்டு, அவரையே கோயிலுக்கு தலைவராக்கி, கோயிலில் புகழ் மென்மேலும் பரவவும், திருவிழாக்கள் சிறப்பாக நடக்கவும் உதவினான். இறைவன் அடிகளின் பக்தியில் மகிழ்ந்து 63 நாயன்மார்களில் ஒருவராக்கினார். இந்த தெய்வத்திற்கு நவகிரகங்களும் நாமகரணம் செய்திருக்கிறது. சூரியன், சந்திரன், குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் நாமகரணம் செய்துள்ளது.

பௌர்ணமி நாளில் சங்க தீர்த்தம் புனித நீர் எடுத்து சுயம்பு மூர்த்தி என அசலைஸ்வரருக்கு அபிஷேகம் செய்து இந்திராச்சனை செய்து வந்தால் அரசியலில் வெற்றி பெறுவார்கள்.

* ஏழாம் பாவகம் மற்றும் 8ம் பாவகத்தில் சுக்கிரன் இருந்தால் அது காரோக பாவ நாஸ்தி. பூரம் நட்சத்திர நாளில் வெள்ளை மொச்சை நைவேத்யம் செய்து மஞ்சள் பட்டு வஸ்திரம் கொடுத்து கோயிலுக்கு வரும் கன்னிப் பெண்களுக்கு தானம் செய்தால் தோஷம் விலகும்.

*ஜாதகத்தில் 2ம் பாவகத்தில் சந்திரன் இருந்தாலும் சந்திரன் உச்சம் பெற்று இருந்தால் இங்குள்ள தீர்த்தத்தில் சிறிது தீர்த்தம் எடுத்து அதில் பசும்பால் கலந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து மகாவிஷ்ணு அர்ச்சனை செய்து வந்தால் பொன் சேர்க்கை நடைபெறும். வாழ்வில் சுபிட்ஷ பலன்கள் உண்டாகும். மிகவும் பிரசித்தி பெற்ற திருத்தலம்.

# 10 ஆயிரம் ரன்கள்: ஸ்மிருதி சாதனை



சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்கள் குவித்த 4வது வீராங்கனை என்ற சாதனையை இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா நிகழ்த்தியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் இந்தியா, இலங்கை அணிகளுக்கு இடையிலான 4வது டி20 கிரிக்கெட் போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் விளையாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 221 ரன்கள் குவித்தது. இதில் ஸ்மிருதி மந்தனா 27 ரன்கள் எடுத்திருந்தபோது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களைக் கடந்த வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

இந்த வரிசையில் இந்திய வீராங்கனை மிதாலி ராஜ் 10,868 ரன்கள் குவித்து முதலிடத்தையும், நியூஸிலாந்தின் சுசி பேட்ஸ் 10,652 ரன்கள் குவித்து 2ம் இடத்தையும், இங்கிலாந்தின் சார்லோட் எட்வர்ட்ஸ் 10,273 ரன்கள் குவித்து 3வது இடத்தையும் பெற்றுள்ளனர். ஸ்மிருதி மந்தனா 10,053 ரன்களுடன் 4ம் இடத்தில் உள்ளார்.

# தேசிய சீனியர் பாட்மிண்டன்: ரித்விக் சஞ்சீவி சாம்பியன்



தேசிய சீனியர் பாட்மிண்டன் போட்டியில் ரித்விக் சஞ்சீவி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடா நகரில் 87வது தேசிய சீனியர் பாட்மிண்டன் போட்டிகள் நடைபெற்று வந்தன. நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஹட்சன் பாட்மிண்டன் சென்டர் வீரரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான ரித்விக் சஞ்சீவியும், ஹரியானா வீரர் பாரத் ராகவும் மோதினர்.

இதில் ரித்விக் சஞ்சீவி 21-16, 22-20 என்ற புள்ளிகள் கணக்கில் பாரத் ராகவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். முன்னதாக அரை இறுதிப் போட்டியில் ரித்விக் சஞ்சீவி 21-16, 17-21, 22-20 என்ற கணக்கில் கேரள வீரர் கிரண் ஜார்ஜை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரித்விக் சஞ்சீவின் வெற்றி குறித்து அவரது பயிற்சியாளரும், ஹட்சன் பாட்மிண்டன் சென்டரின் தலைமைப் பயிற்சியாளருமான ரஜினிகாந்த் கூறும்போது, "இந்தப் போட்டித் தொடரின் ஆரம்பத்தில் இருந்தே ரித்விக் சஞ்சீவி அபாரமாக விளையாடி வெற்றி கண்டார். அவரது ஆட்டத்தில் இருந்த ஒழுங்கும், முக்கிய நேரங்களில் அவர் குவித்த புள்ளிகளும் அவர் சாம்பியன் பட்டம் வெல்ல உதவியாக இருந்தன. போட்டிக்காக அவர் பெற்ற பயிற்சியும், அதை சரியான நேரத்தில் சிறப்பாக செயல்படுத்தியதுமே வெற்றிக்கு காரணமாக அமைந்தன'' என்றார்.



# விஜய் ஹசாரே போட்டியில் விளையாடுகிறார் ஸ்ரேயஸ் ஐயர்

விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் தொடரில், ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியின் துணை கேப்டன் ஸ்ரேயஸ் ஐயர் விளையாடவுள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் அனைவரும் இந்த விஜய் ஹசாரே போட்டியில் விளையாட வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி ரோஹித் சர்மா, விராட் கோலி, ரிஷப் பந்த், ரிங்கு சிங் உள்ளிட்டோர் தாங்கள் சார்ந்த மாநில அணியில் இடம்பெற்று திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் காயம் காரணமாக விலகி இருந்த ஸ்ரேயஸ் ஐயர் தற்போது பெங்களூரு மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்.

இதைத் தொடர்ந்து வரும் ஜனவரி 2ம் தேதி அவர் ஜெய்ப்பூர் வருகிறார். ஜெய்ப்பூரில் ஜனவரி 3, 6ம் தேதிகளில் நடைபெறும் போட்டிகளில் முறையே மகாராஷ்டிரா, இமாச்சல பிரதேச அணிகளுக்கு எதிராக மும்பை அணியின் சார்பில் அவர் களமிறங்குகிறார்.

விஜய் ஹசாரே போட்டிகள் முடிந்த பின்னர் ஜனவரி 11ம் தேதி தொடங்கும் நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் அவர் இணைந்து கொள்வார் என பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.



# தணிக்கை சிக்கலில் 'ஜனநாயகன்'

'ஜனநாயகன்' படத்தின் தணிக்கையில் பல்வேறு காட்சிகளை நீக்கவும், வசனங்களை மியூட் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி 9ம் தேதி வெளியாகவுள்ள படம் 'ஜனநாயகன்'. இப்படத்தின் தணிக்கைப் பணிகள் தொடங்கின. இதனைப் பார்த்த தணிக்கை அதிகாரிகள் பல்வேறு காட்சிகளை நீக்கவும், சில வசனங்களை மியூட் செய்யவும் கூறியிருக்கிறார்கள். இதன் பணிகளை முடித்து மீண்டும் தணிக்கைக்கு அனுப்பவுள்ளது படக்குழு.

முக்கியமாக சண்டைக் காட்சிகளில் ரத்தம் தெறிப்பதை குறைக்கச் சொல்லியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்பணிகள் இன்றுடன் முடிவடையும் என்று கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து டிசம்பர் 31ம் தேதி இரவு புத்தாண்டு கொண்டாட்டமாக 'ஜனநாயகன்' ட்ரெய்லரை வெளியிடலாம் என்று படக்குழு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பாபி தியோல், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, கௌதம் மேனன், பிரியாமணி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ஜனநாயகன்'. கே.வி.என் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தின் ஒளிப்பதிவாளராக சத்யன் சூரியன், இசையமைப்பாளராக அனிருத் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

# மீண்டும் இணையும் 'சூப்பர் டீலக்ஸ்' கூட்டணி?

தியாகராஜன் குமாரராஜா இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்க புதிய படமொன்று தொடங்கப்பட இருக்கிறது.

தியாகராஜன் குமாரராஜா இயக்கத்தில் விஜய் சேதுபதி, ஃபகத் பாசில், சமந்தா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'சூப்பர் டீலக்ஸ்'. 2019ம் ஆண்டு வெளியான இப்படம் விமர்சன ரீதியாக கொண்டாடப்பட்டது. இப்படத்துக்காக சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதினையும் வென்றார் விஜய் சேதுபதி. அதற்குப் பிறகு தியாகராஜன் குமாரராஜா எந்தவொரு படத்தினையும் இயக்காமல் உள்ளார்.

தற்போது தனது அடுத்த படத்துக்காக தயாராகி வருகிறார் இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா. இதில் நாயகனாக நடிக்க விஜய் சேதுபதியிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இதில் ஃபகத் பாசிலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இதன் தயாரிப்பாளர் உள்ளிட்ட விவரங்கள் அனைத்துமே இன்னும் 10 நாட்களில் முடிவாகிவிடும் என்கிறார்கள் திரையுலகினர்.

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இதன் படப்பிடிப்பு தொடங்க படக்குழு முடிவெடுத்துள்ளது. ஒரே கட்டமாக படப்பிடிப்பை முடிக்கும் அளவுக்கு திரைக்கதையை அமைத்திருக்கிறார் தியாகராஜன் குமாரராஜா. ஆகையால் அவரது இயக்கத்தில் குறுகிய காலத்தில் உருவான படமாக இது இருக்கும் என்கிறார்கள்.







# நாய்க்குட்டியால் மாறிய ஷாலினி பாண்டே

தெலுங்கில் விஜய் தேவரகொண்டா ஜோடியாக நடித்த 'அர்ஜூன் ரெட்டி' என்ற படத்தின் மூலம் பிரபலமானவர், ஷாலினி பாண்டே. தமிழில் பல படங்களில் நடித்துள்ள அவர், தனுஷ் இயக்கி நடித்த 'இட்லி கடை' என்ற படத்தில் சிறப்பாக நடித்திருந்தார். தற்போது அவர் 'பீட்டா' என்கிற விலங்குகள் நல அமைப்பில் உறுப்பினராக இருக்கிறார். சமீபத்தில் மும்பையில் நடந்த 'நாய்களை தத்தெடுங்கள், விலைக்கு வாங்காதீர்கள்' என்ற பீட்டா அமைப்பின் பிரச்சார நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அப்போது பேசிய அவர், 'எனது செல்ல நாய்க்குட்டியின் பெயர், பிர். இதை நான் கடந்த 2021ல் ஹிமாச்சலில் இருந்து காப்பாற்றி, என் வீட்டுக்கு கொண்டு வந்து வளர்க்கிறேன். செல்ல நாய்களுடன் பழகிய இந்த சில வருடங்களில், நான் இன்னும் சிறந்த மனிதநேயம் கொண்டவளாக மாறியிருக்கிறேன். உயர்ந்த ரக நாய்களை விலைக்கு வாங்குவதற்கு பதிலாக, தெருவில் சுற்றித்திரியும் நாய்களை தத்தெடுத்து வளருங்கள்' என்று கோரிக்கை விடுத்துள்ளார்.



# வடுகபட்டியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு (ம) முப்பெரும் விழா

பெரியகுளம் டிச.30-
தேனி மாவட்டம் பெரியகுளம் அடுத்துள்ள வடுகபட்டி சங்கரநாராயணன் நினைவு நடுநிலைப் பள்ளியில் 40 ஆண்டுகளுக்கு முன்னர் (1986 1994ம் கல்வியாண்டில்) படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு, கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி மற்றும் ஆசி பெறுதல், குடும்ப நண்பர்கள் சந்திப்பு ஒருங்கிணைப்பு விழா என முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நண்பர்கள் மற்றும் குடும்ப அறிமுகம் மற்றும் நீங்கா நினைவுகள் பகிர்தல், சிற்றுண்டி பரிமாறுதல், ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கி ஆசி பெறுதல், பள்ளிக்கு நினைவு பரிசு வழங்குதல் என நெகிழ்ச்சியாக கொண்டாடி பசுமை நினைவாக குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். பின்னர் தாங்கள் படித்த பள்ளிக்கு சென்று ஒருவருக்கொருவர் பழைய நினைவுகளை பரிமாறிக் கொண்டனர். மேலும் பள்ளி குழந்தைகளுக்கு கிரிக்கெட், கைப்பந்து, கேரம் போர்டு உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்கினர்.



# இலவச வீட்டு மனை பட்டா கேட்டு 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தர்ணா

திண்டுக்கல், டிச.30-
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் இந்தியா ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில், இலவச வீட்டு மனை பட்டா கேட்டு 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவ லகத்தை முற்றுகையிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக் கோட்டை யில்,இந்தியா ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில், நிலக்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுமக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி மாவட்ட செயலாளர் சத்யவாணி தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பேரணியாக வந்து நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவ லகத்தை முற்றுகையிட்டு கருணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆங்கிலேயர் அரசால் வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் மற்றும் பூமிதான நிலங்களை மீட்டு ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்க வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தையெட்டி ஏராளமான போலீசார் குகுவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்ஞ் இதனால் அந்த பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

# தாம்பரம் மாநகராட்சியில் இந்த வருடத்திற்கான கடைசி மாமன்ற கூட்டம் நடைபெற்றது





தாம்பரம், டிச.30-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் இந்த வருடத்திற்கான கடைசி மாமன்ற கூட்டம் மேயர் வசந்தகுமாரி கமலகணனன் தலைமையில் நடைபெற்றது,

இதில் 70 வார்டுகளில் இருந்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல தலைவர்கள் கலந்துகொண்டனர்,

அப்போது பேசிய எதிர்கட்சி தலைவர் சங்கர் சேலையூர், சிடலப்பாக்கம், கடப்பேரி, தாம்பரம் ஆகிய பகுதிகளில் பூர்விகமாக குடியிருந்து வருகின்றனர் கடந்த மூன்று வருடங்களாக எந்த வரியையும் தாம்பரம் மாநகராட்சி சார்பில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை அப்படியே வரி விதித்தால் அதிகமாக வசூலிக்கபடுவதாக மேயரிடம் சரமாரியாக கேள்வி எழுப்பினார்,

மேலும் அதிமுக மாமன்ற உறுப்பினர்கள் இருக்கும் அடிப்படை பிரச்சனைகளை தெரிவிப்பதற்காக தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகளை தொடர்பு கொண்டால் எந்த வித பதிலையும் அளிக்கவில்லை என்று குற்றம்சாட்டினார்,

இதனால் மாமன்ற கூட்டத்தில் பெரும் சலசலப்பு நிலவியது, பின்பு மாற்று திறனாளி நியமன குழு தலைவராக பம்மல் கவிதா என்பர் நியக்கபட்டு அவர்களுக்கு பொன்னாடை போர்த்திய மேயர் வசந்தகுமாரி பாராட்டு தெரிவித்தார்



■ புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா துவார் ஊராட்சி கிராம அலுவலக கட்டிடம் மக்கள் அச்சுறுத்தும் நிலையில் உள்ளதால் அகற்றி புதிய கட்டிடம் கட்டித் தர அப்போதி பொதுமக்கள் கோரிக்கை

# நீலகிரி, கொடைக்கானல் மலைப் பகுதிகளில் உறைபனி நிலவ வாய்ப்பு



சென்னை, டிச.30-
நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் நாளை இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு கடலோர ஆந்திரா பிரதேசம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (டிச.30) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். டிச.31 முதல் ஜன.4ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை முதல் ஜன.4ம் தேதி வரை இரவு அல்லது அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் குறைவாக இருக்கக்கூடும். நாளை நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பதிவான குளிர் அளவுகளின்படி அதிகபட்சமாக சமவெளிப்பகுதியான திருத்தணியில் 18 டிகிரி, மலைப்பகுதியான கொடைக்கானலில் 7 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவாகியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இரவு அல்லது அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "சிறுவர்கள் கையில் போதைப் பொருள், அரிவாள்... யார்



சென்னை, டிச.30-
"வெறும் 17 வயதுள்ள சிறுவர்கள் கையில் போதைப் பொருளும், அரிவாளும் செல்லும் நிலைக்கு யார் பொறுப்பு?" என திருத்தணி சம்பவத்தை முன்வைத்து தமிழக அரசை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக சாடியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "சென்னையில் இருந்து திருத்தணி செல்லும் ரயிலில், கத்தியுடன் ரீல்ஸ் எடுத்துக் கொண்டிருந்த 17 வயதுள்ள 4 சிறுவர்களைத் தடுத்த சுராஜ் என்ற வடமாநில இளைஞரை, சிறார்கள் அரிவாளால் சரமாரியாக கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இந்த தாக்குதல் தொடர்பான காணொலியைக் காண நெஞ்சம் பதைக்கிறது. படிக்கும் புத்தகம் இருக்க வேண்டிய கைகளில் பட்டாக்கத்தி வந்திருப்பது வெட்கக்கேடானது.

தமிழ்நாட்டை இப்படி ஒரு கொடூர நிலைக்கு ஸ்டாலினின் திமுக அரசு தள்ளிவிட்டதே என்ற கோபம் தான் மேலோங்குகிறது.

அரிவாளால் தாக்கிய சிறுவர்கள், கஞ்சா போதையில் இருந்ததாக கூறப்படுகிறது. வெறும் 17 வயதுள்ள சிறுவர்கள் கையில் போதைப் பொருளும், அரிவாளும் செல்லும் நிலைக்கு யார் பொறுப்பு? இந்த பொம்மை முதல்வர் தானே? மாநிலத்தின் எதிர்காலத்தை இப்படி சீர்குலைத்து விட்டு, எத்தனை மேடை ஏறி, என்ன பெருமை பேசி என்ன பயன்?

கைது செய்யப்பட்டுள்ள சிறுவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவும், இந்த அளவுக்கு ஒரு சம்பவம் நடக்க மூலக் காரணமான சட்டம் ஒழுங்கு சீர்கேட்டையும், போதைப் பொருள் புழக்கத்தையும் கட்டுக்குள் கொண்டு வர கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.




# தமிழிசை உடன் உற்சாக 'போஸ்' கொடுத்த கனிமொழி

கோவை, டிச.30-
பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் உடன், திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி மற்றும் எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் உற்சாகமாக, 'போஸ்' கொடுத்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழகத்திலும், தேசிய அளவிலும், திமுக மற்றும் பாஜகவினர் அரசியல் ரீதியாக எதிர் துருவமாக செயல்பட்டு வருகின்றனர். இருதரப்பிலும் கடுமையான கருத்து மோதல்கள், போராட்டங்கள் நடத்துவது தொடர்கதையாய் நடந்து வருகிறது. இந்நிலையில், இரு கட்சியின் பெண் தலைவர்களும் ஒன்றாக நின்று 'போஸ்' கொடுத்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

கோவையில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்க பாஜக மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் இன்று காலை சென்னையில் இருந்து விமானத்தில் புறப்பட்டார். திருப்பூர் மாவட்டத்தில் நடக்கும் மாநாட்டில் பங்கேற்க திமுக துணைப் பொதுச் செயலாளரும், எம்பியுமான கனிமொழி மற்றும் எம்பி தமிழச்சி தங்கப்பாண்டியன் ஆகியோர் இதே விமானத்தில் பயணிக்க வந்துள்ளனர்.

விமானத்தில் தமிழிசை சவுந்தரராஜனைப் பார்த்த கனிமொழி மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர், அவரை சந்தித்து நலம் விசாரித்தனர். இதனைத் தொடர்ந்து மூவரும் உற்சாகமாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்த புகைப்படத்தை, கனிமொழி எம்.பி தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். அதில், 'வெல்லும் தமிழ் பெண்கள்' என்ற திமுக மண்டல மாநாட்டு தலைப்பையும் குறிப்பிட்டுள்ளார். அவரது இந்தப் பதிவு சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இதற்கு வரவேற்பு தெரிவிக்கும் வகையில், 'அரசியல் மாண்பு, அரசியல் நாகரிகம் தொடரட்டும்' என வாழ்த்துப் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.



# குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

நிலக்கோட்டை, டிச.30-
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே காமலாபுரம் கிராமத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சி கெல்ப்ஸ் (Helps) தொண்டு நிறுவன இயக்குனர் மரிய ஜான் கிரிஸ்டோபர், மேலாளர் சுமதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சக்திவேல், 181 சேவை மையத்திலிருந்து செல்வி ஹரிணி, அனைத்து மகளிர் காவல் நிலைய காவல்துறை அதிகாரி மேனகா, துணை வட்டாட்சியர் கல்பனா, அங்கன்வாடி ஆசிரியர் சோபனா, ஊராட்சி மன்ற செயலர் சிவராமன், ஊர் நாட்டாமை சகாயராஜ், கிராம முக்கியஸ்தர் சேவியர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவசர உதவி எண் 1098 குறித்தும், "குழந்தைகளுக்கு அன்பு கரங்கள்" திட்டம் பற்றியும், எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர், இந்திரா, கிருத்திகா, பூங்கொடி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்




# தியாகி கக்கன்ஜி நினைவேந்தல் நிகழ்ச்சி... கக்கன்ஜி மக்கள் மன்ற நிர்வாகிகள் அனுசரிப்பு

சிவகங்கை, டிச.30-
சிவகங்கையில் காங்கிரஸ் பேரியக்க தலைவர், சுதந்திர போராட்ட வீரர், மேனாள் அமைச்சர் தியாக சீலர் கக்கன்ஜி அவர்களது 45 வது நினைவு தினத்தை முன்னிட்டு சிவகங்கை நகர் கோர்ட் வாசல் திருப்புத்தூர் சாலை அருகே அமைந்துள்ள கக்கன்ஜி மக்கள் மன்றக் கட்டிடத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கக்கன்ஜி அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. கக்கன்ஜி மக்கள் மன்ற நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர். செந்தில்நாதன், மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் வள்ளல் பச்சேரி சி.ஆர். சுந்தரராஜன், காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் அரசனிப்பட்டி கே.ஆர். வி. இராஜேந்திரன், மாவட்ட மேனாள் தலைவர் எம்.இராஜரத்தினம், மாடக் கோட்டை கருப்பையா, விசிக மண்டல துணைச் செயலாளர் முத்துராஜா, பாஸ்கரன், இந்திய குடியரசுக் கட்சி மாநில செயலளர் அத்வாலே இன்ஷ்யூரன்ஸ் கருப்பையா, கொத்தம ங்கலம் சேது, ம. சிங்குமுத்து , காங்கிரஸ் நகரத் தலைவர் கவுன்சிலர் விஜயகுமார், வட்டாரத் தலைவர்கள் கரும்பாவூர் உடையார், காளையார்கோவில் மதியழகன், வேலாயுதம், தொகுதி பொறுப்பாளர் ஏ. என். சோனை , இந்திய குடியரசுக்கட்சி அத்வாலே மாவட்ட தலைவர் காமராஜ் , விசிக ஐக்கியப் பேரவை மலைச்சாமி, மேலமங்கலம் காமராஜ், பெரியார் ராமு, வழக்கறிஞர் சூரக்குளம் சுரேஷ், நகரம்பட்டி ஊராட்சி மேனாள் தலைவர் முரளிதரன் , விசிக திருமா ஆனந்த், பறையர் பேரவை பழனிமுத்து , பேராசிரியர் சேவுகன் , காங்கிரஸ் எஸ் எஸ்டி செயலாளர் மேலமங்கலம் முரளீதரன்,விசிக சுடர்மணி, கல்லூரணி கிராமத் தலைவர் பொன்மலையான் , வழக்கறிஞர்களான பாரதி ,அய்யனார், தினேஷ் பாண்டியன், தமறாக்கி சுரேஷ், பிறைசூடன், ராம்கி, ஜெயபால், ஆறுமுகம், காங்கிரஸ் லெட்சுமணன், சிவகங்கை நகர்செயலாளர் என். எம். ராஜா, முத்துப்பட்டி அய்யாக்காளை, ஒ புதூர் சீனிவாசன், சுப..ஜெயக் குமார் கொத்தமங்கலம் நாகராஜ் உள்ளிட்ட பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161